சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.22/2021</u>

13.11.2025

பி.வா.சா.1 திரு. சாந்தகுமார், த/பெ. தங்கவேல்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பைனான்ஸ் மற்றும் ரியல் எஸ்டேட் செய்துவருகிறேன். ஸ்ரீகுருமூர்த்தி பைனான்ஸ் என்ற பெயரில் நடத்திவருகிறேன். பைனான்ஸ் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். நான் வருமானவரி செலுத்திவருகிறேன். நான் வருமானவரி செலுத்துவதை காட்டும் விதமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். நான் எத்தனை காசோலை வழக்குகள் திருவாரூர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. சுமார் 100 வழக்குகள் இருக்குமா என்றால் சரியாக ஞாபகமில்லை. கணக்கு எடுத்து தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். நான் சிவில் வழக்குகள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 100 க்கும் மேற்பட்ட காசோலை வழக்குகள் நடத்தியுள்ளதால் அது சம்பந்தமாக சட்ட அறிவு எனக்கு உள்ளதா என்றால் இல்லை அதற்காக தான் வழக்கறிஞர் வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆனால் தேதியும் பெயரும் வேறு ஒருவரால் எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 காசோலை என் பெயரில் கணக்குள்ள சிண்டிகேட் கிளைக்கு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் எனது காசோலை வங்கியில் செலுத்தியதற்கான ஆவணம் என்றால் சரிதான். ஆனால் காலாவதியான காசோலையை செலுத்தியுள்ளார்கள். வா.சா.ஆ.1 காசோலையை வி.தியாகராஜனுக்கு 21.10.2016 அன்று கொடுத்தேன். நிலம் விற்பனை சம்பந்தமாக ஆதாரமாக கொடுத்தேன். வா.சா.ஆ.1 காசோலையை பெயரும், தேதியும் எழுதாமல் கொடுத்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள தொகையை நான்தான் பூர்த்தி செய்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள தேதி, பெயர் யார் பூர்த்தி செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தேதி, பெயர் நான் பூர்த்தி செய்துவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நான் தயாராக உள்ளேனா

என்றால் நான் தயாராக உள்ளேன். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பு காசோலை நகலை பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி நான் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நானும், வி.டி. தியாகராஜனும் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருகிறோம். வாதி ஜெயராமனை எனக்கு தெரியுமா என்றால் யாரென்றே எனக்கு தெரியாது. ஜெயராமனை எப்போது எனக்கு தெரியும் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னிட்டுதான் ஜெயராமன் யார் என்று தெரியும். ஜெயராமன் மீது திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் புகார் கொடுத்ததன் அடிப்படையில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் என்னிடம் காட்டப்படும் குற்ற அறிக்கைதான் என்னால் கொடுக்கப்பட்ட புகாருக்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும். நான் வி.டி.தியாகராஜன், ஜெயராமன், செல்வம் ஆகியோர்கள் மீது புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரை போலீசார் விசாரணைக்கு பின்னிட்டு உண்மைக்கு புறம்பாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அதனை ஆட்சேபணை செய்து நான் தனியாக மனு தாக்கல் செய்துள்ளேன். நான் கொடுத்த மனு எண் மற்றும் வாய்தா தேதி தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எனக்கும் வி.டி.தியாகராஜனுக்கும் தொழில் ரீதியாக பிரச்னை ஏற்பட்டது என்றால் சரிதான். வி.டி.தியாகராஜனுக்கும் எனக்கும் உள்ள விரோதத்தை பயன்படுத்தி வாதியிடம் வாங்கிய தொகையை கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் தியாகராஜனிடம் காசோலை கொடுத்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா காசோலையை 1.5 பைசா வட்டிக்கு பணம் வாங்கியதாக காசோலையை எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் காசோலையை தியாகராஜனுக்கு கொடுத்தேன். தியாகராஜனுக்கு எதற்காக காசோலை கொடுத்தேன் என்றால் நான் ரியல் எஸ்டேட் தொழில் வியாபாரத்திற்காக ரூ.5,00,000/- வாங்கியதற்காக வா.சா.ஆ.1 ஆவணத்தை கொடுத்தேன். வாங்கிய பணத்தை திரும்ப கொடுத்துவிட்டேன். பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில் வாதி ஜெயராமனின் பெயர் எழுதப்பட்டு ரூ.10,00,000/- போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.11 ஆவணம் எந்த தேதியில்

எழுதப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.11 ஆவணத்திலேயே ஜெயராமன் பெயரை குறிப்பிட்டுவிட்டு தற்போது ஜெயராமனை அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் தெரியும் என வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வங்கியில் என் பெயரில் உள்ள காசோலை பணமாக்க செலுத்தினால் பணம் செலுத்தக்கூடாது என எந்த தேதியில் கடிதம் கொடுத்தேன் என்றால் 09.04.2018 ல் கொடுத்தேன். பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் வாதிக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வங்கியில் காசோலையை பணமாக்க வேண்டாம் என எழுத்து பூர்வமாக கடிதம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எஸ்டிசி. 514/2019 வழக்கு எதற்காக போட்டுள்ளேன் என்றால் காசோலை மோசடி செய்ததால் தாக்கல் செய்தேன். வாதியிடம் வாங்கிய கடனை திரும்ப கேட்டு வாதி அறிவிப்பு அனுப்பியதால் அவர் மீது 3 குற்ற வழக்குகளை தவறாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. என் மீது பல கந்துவட்டி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 தான் பதிவு செய்யப்பட்டது அந்த வழக்கும் முடிவடைந்துவிட்டது. நான் வங்கியில் வாங்கிய கடனுக்காக என் பெயரில் உள்ள சொத்துக்கள் வங்கியால் ஏலம் விடப்பட்டு வருகிறது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் எனக்கு கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனுக்காக தான் வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட தொகையை வாதிக்கு கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 10 ஆவணங்கள் வழக்கிற்கு தேவைப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். தாவா தொகையை வாதிக்கு திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.